367

ஆண்டவர்கள் துணை.

பொட்டல்புதூர் முகையதீனாண்டவர்கள்
தர்கா உற்பத்தி.

இஃது
அநேகவர்ணமெட்டுகளடங்கிய
சிந்து, தெம்மாங்கு, நொண்டிச்சிந்து, பல்லவி
முதலியவைகளால்
கல்விடைக்குறிச்சி தாசிமுத்துத்தேவர் குமாரர்
நெல் கட்டும்பாரையிலிருக்கும்
சிவஞபாண்டியத்தேவரால்
பாடியதை
பொட்டல்புதூர் ஆலிம்சாகிப் அவர்கள் குமாரர்
சேக்இபுருகிம் லெப்பையவர்களால்
பரிசோதிக்கப்பெற்று
ஷியூர் அசன்முகைதீன்லெப்பையவர்கள்குமாரர்
அசன்செய்யதுலெப்பையவர்களின்
பொருளுதவியால்

வம்பாசமுத்திரம்
லாசம் அச்சாபீஸில்
பிக்கப்பெற்றது.
1924. [அணா $1\frac{1}{2}$

REGISTRAR OF BOOKS
15 JAN 1925
MADRAS
Q7:31
N24.
(8)969

ஆண்டவர்கள் துணை.

பொட்டல்புதூர் முகையதீன் ஆண்டவர்கள் தர்கா உற்பத்தி.

விருத்தம்.

பண்டுள்ளோர்பாடினோர்கள் பாதமென்சிரசில்கொண்டு
எண்டிசைபுகழும்யா முகையதீன் ஆண்டகைமேல்
செந்தமிழ் சிந்துபாட சிறுவன்மேல் அன்புகூர்ந்து
வந்தருள் புரிவாயிந்த வையகம் படைத்தநாதா.

ஆதியில் தர்கா உற்பத்தி.

நொண்டிச்சிந்து.

வடதேசத்தில் ஆண்டிருந்தார் -சின்ன உமர்லப்பை தென்னாடு தனில் வந்து- நல்ல திருவாங்கூர் சமஸ்தானம் -கோட்டார் நகரிலிருந்து சிலகாலம் சென்றபின்- வடதேசம் பார்த்துவரவேணுமென்று • யாத்திரையாக களக்காடு நகர்வழியாய் -நல்ல கல்லிடைக்குறிச்சிநகர் தனில்கடந்து- ஆவுடையாபுரம் நகரில்-வந்திலங்கி அனைவோரும் கண்டறிந்து அன்பாயிருக்க - வடபகுதாதா

சென்னை முகையதீன் ஆண்டவர்கள் தெக்ஷணத்தில் வந்திறங்கி-ராமநதிக்கரையோரம்தன்னில்-நல்லநாகரீகமான பொட்டல்தனிலிறங்கி - இருபாதமதை தான்பதித்து-வைத்துவிட்டு பக்தரிடம் சொல்லவென்று ஆண்டவர்சென்று-ஆவுடையாபுரமதிலே-நல்ல சின்ன உமர் லெப்பை இடமதிலே-கனவில் சொல்லியதை-நல்ல கவனமாய் கேளுங்கள் கனவான்களே. இந்நகருக்கு கீழ்திசையில் காட்டுக்குள்ளே- ஏகமாம் செடிகொடிகள் படர்ந்திருக்கும்-அங்கு ஒரு பொட்டலிருக்கும் -அதில் அழகானபாதரக்ஷை பதித்திருக்கும்-பாதத்திற்கு தென்புரத்தில்-ஒருமுளத்தில் பனையொன்றுதான் முளைத்துத்தானிற்கும்-கதிரொருபக்கம் காய் ஒருபக்கம்- பழமொருபக்கமாய்யிருக்கும் அந்தப் பனையதிலே கண்டந்த அடையாளத்துடன்-பாதத்தில் கட்டடமும்வைத்து ஐந்துவேளை தொழுதால்-வறுமைதீரும் நகர்பெருகும்-என்றுசொல்லி ஆண்டவர்கள் கீழ்திசையில் செல்லவுமே-நித்திரைதெளிந்தஉமர்லெப்பை-ஒன்றுமேதெரியாமலே தானிருக்க-மறுநாள் கனவில்சென்று முன் சொன்ன அடையாளங்கள் தானுரைத்து சென்றனர்கள் கீழ்திசையில் லெப்பையவர்-திடுக்கென்று எழுந்துவந்து அதிசயம்கண்டு-இருபாதம்தொட்டு கண்ணில்வைத்துக்கொண்டொரு ஓலையினால் மறைத்து ஒரு கட்டடம் வைத்து-வணங்கிவருங்காலம் அதில்-ஒன்று இரண்டு மூன்றுதரம் கட்டிடம் வைத்தும்-அக்கினியால் அழிந்

துவிட-அப்போ சின்ன உமர் லெப்பை என்னசெய்ய லாமென்று- மனதில் கவலைகொண்டிருக்கையில்- மறுப டியும் மூன்ருவது கனவில் சென்று வடதேசம்- தனி லிருந்து நாய்க்கனவன் -எருமைக்கடா மாடு இரண்டு கொண்டுவருவான் கீழக்கரை தனில்வாழும்- மரைக்கா யர் ஐநூறுரூபாய்கொண்டு வந்துதருவார்- மாட்டை நீ கிரையம்வாங்கி-வண்டியொன்று தான்பிடித்து• கல்லடி த்து கட்டிடம்வைப்பாய்- யென்றுசொல்லி ஆண்டவர் சென்ருர் - லெப்பையவர் அதையறிந்து மரக்காயரிடம் ரூபாயுப்பெற்று-மாட்டையும் கிரையமகேட்க -நாய்க்க னவன் விலையிறைக்கிக்கொடுப்பதில்லை யென்றுமேசொ ல்லி-மாட்டையெழுப்பிப்பத்திருன்- அங்கே மாடுரெண் டும் படுக்கைவிட்டெழுந்திருக்க -சாதிக்கவே நாயக்க னவன்- அதையறிந்து லெப்பையிடம் கொடுத்தரூபாய போதுமென்று கைதனில்கேட்க- லெப்பையவர் பத்து ரூபாய்-கிரையம்வைத்து 'எடுத்தவன்கையில்கொடுத்த னுப்பிவிடவே, மாடுரெண்டும் தானெழுந்ததே- லெப் பையவர் ஆண்டவர்கள் சொன்னபடி வண்டிபிடித்து- கல்லடித்துக்கட்டிடம்வைத்தார், நல்ல கட்டிடங்கள் க ல்பணியால தானமைத்தார் அன்றுமுதல் இன்றுவரை இன்னமும் கல்யாணவாசலாக யிருக்கும் பள்ளிவாசல் இதுதான்.

கலிலோ என்ற வர்ணமெட்டு.

நபிபேரரே நாயகமேவந்தருள்புரிவீரே யேழைகள்மீதில்()

புவியாவும் புகழுமுகையதீன் ஆண்டவாருள்தருவீர் கிருபை
செய்வீர் (நபி)

பதினோர்ம் தலைமுறைவரையிலும பார் முழுவதும் ஆண்ட
வா புகழ்கொண்டவா (நபி)

மகமதியர் குலம்தனிலவதரித்திடும் மானிடர் யாவர்க்கும்
மாணிக்கமான (நபி)

பெரும்வேத வேதியர்களென்னும் பெருமையாய் உம்மை
தொழவே கதி மீழவே (நபி)

காட்சி கண் காட்சி என்ற மெட்டு.

பள்ளியின் காட்சியே பக்தருக்குக்கண்காட்சியே
வெள்ளியால்சந்தணக்குடம் விந்தையாய்வருகுமிடம்-ப

நாதனிருப்பிடமே ராமநதிஓரமே
நாகரீகமானரஸ்தர் எங்கும்பிரகாசமே
எந்தவேளையுமுகையதீன் ஆண்டவர்கெம்பீரமே
எந்தயிடம்பார்த்தாலும் நஞ்சைபுஞ்சைதீரமே

நல் வெள்ளிக்கொடி மரம் மேற்கே பள்ளி
நால்புரம் மணரு வெகு ஷோக்கே நாதன்
பக்கத்தில் கடைபசார் வடக்கே நல்ல
பக்தர்கள் தொழுவர் கிழக்கே தெற்கு

மண்டபத்தின் மீது-மகமதியர் சாது
பக்தியில்லார்க்கருளேது-பாத்தியாவும் ஓது .(பள்ளி)

வழிநடைச்சிந்து.

பாழைவாய் கமுகில்வந்து என்றமெட்டு.

அட்டதிசையோர்புகழும் பொட்டல்புதூர் தன்னில்வாழ்
முகையதீன் ஆண்டவர் வெகு சாதுவே
நல்ல - சிங்கார வழிசிந்து ஓதவே.

ஆண்டவர் சன்னதிவெகு அழகைகண்ணுல் நோக்கிடுவாய்
அன்புடனே சொன்னேனடி தேவியே
இவரை - இன்பமாய் தெரிசிப்பாய் என்னுவியே.

தீராதவினைகள்தீர்க்கும் போகாத பாபங்கள்போக்கும்
பொட்டல்புதூர் ஆண்டவரை நாடினல்
அவர்கள்-திருநாமங்கள்சொல்லி யாரும் பாடினல்.

நேமிதச்சனங்கள்வந்து நெய்விளக்குஏத்திநின்று
நேர்த்தியான பாத்தியாவும் ஓதவே
அவர்கள் - கீர்த்தியாய் வரங்கொடுக்கும் சாதுவே.

மானிலத்தில் உள்ளபக்தர் மகதியர்கள்யாபேர்களும்
பதினுலாம் இரவுவந்து கூடவே
முஸ்கையதீன் - ஆண்டவரைக்கொண் டாடவே.

வேதியர்முதலாய்எந்த ஜாதியாராஞலுமங்கே
விதவிதமாய் பழங்கள்வாங்கிச் செல்கிருர்
அங்கே - லெப்பைமாரும் பாத்தியாவைச் சொல்கிருர்.

பள்ளிபில் நிறைந்திருக்கும் பக்தர்களும் லெப்பைமார்களும்
பழம் சர்க்கரை பாத்தியாவெகு நேசமே
பள்ளிவாசல்-யெங்கெங்கும் சாம்பிராணி வாசமே.

இங்கிலீஷ் கிரந்தம்தமிழ் இந்துஸ்தான் கொருனுணர்ந்த
இஞற்தார் எஜமான் பங்களா அற்புதம்
நல்ல - குரோட்டன் செடிகளுமே நால்புரம்.

எங்கிலும் லஸ்தர்குளோப் எணையில்லாத ரசக்குண்டுகள்
ஏகமாய் காணுதடி தோகையே
பள்ளி - வாசல்பார்க்கவேணுமடி பாவையே.

அன்னமேபார் ஆனைகட்டும் சாவடியும் சாயாக்கடையும்
அடுக்கடுக்காய் காப்பிஒட்டல் பாரடி
காசு - கொடுத்துவாங்கிக்கொண்டு தாகம் தீரடி.

நாலுவேதம் ஆறுசாஸ்திரம் காலைமாலை ஓதுவார்கள்
நாகரீகமாகவே இங்கேயே
அடி - தோகையே மகமதியர் சங்கையே.

நாங்கு கோங்கு தேங்கு கொய்யா மாங்குயில்கள் கூவுகின்ற
நாகரீகமானதோர் நகர் தானே
அடி - பாவையே ராமநதியைப்பார் தேனே.

ஆசாரவாசலின்முன்னே அமைந்திருப்பர் கோடாகோடி
அடுக்கடுக்காய் சாப்புகளும் பாரடி
சாமான் - எடுக்கிறஷோக்கதைத்தான் நோடி.

மிட்டாய் வட்டு பூந்திவடை பட்டு சீட்டி விற்கும்கடை
மேன்மையுள்ள டோரியாக்கள் விற்கிறார்
அதைப்- பண்புடனே வாஙக ஜனங்கள் நிற்கிறார்.

ஆண்டவர் மார்க்கத்தின்படி அவனிதன்னில் அரசுசெய்யும்
அன்பர்களைககாத்தருளும் சாமியார்
இந்த - புவனமெல்லாம் ஆளத்த்தக்க நேமியார்.

துலங்குசெம்பொன் என்றமெட்டு.

ரவணசமுத்திரமாம் ரயில் [illegible] ஷனு ஜமாம்
நளம்பெருகும் நகரமாம் [illegible] ஜீவ [illegible]மாம்
தொழுகையும் ஐந்து நேரமாம்

மேட்டுத்தெருவினில் கூட்டமகமதியர்
நாட்டமுடன்பணியும்-கூட்டமுடன்சந்தணக்குடங்கள்
வெகுசிங்காரமாம் காசியார்பள்ளிமுன்எழுந்தருளுமாம்

காசியார்பள்ளிவிட்டு கனபேர் தண்டயம்தொட்டு
அன்பாயவர்கண்ணிவிட்டு சந்தனக்குடமடுக்காய்
மேட்டுத்தெருவிட்டு மங்களவாத்தியம்எங்குமுழங்க
மாமகமதியர்கள்நின்றுமேதுலங்க மடமடாவென்று
முழங்கவே — இங்கிலீஷ்மேளங்கள் பியாண்டுடன்
கிஞ்சற்றிலங்கவே.

நெடுந்தெருதனில்இறங்க நேருய் கீழ்திசைநோக்க
நேர்த்தியாய்மத்தாப்புத்துலங்க சரமாரியாகநெய்தீவட்
டிகள்இலங்க காஜாமுகையதீன் ஆண்டவர் பள்ளிவா
சல்வழியால் ராமநதியில் நடந்து கடந்து வரவே
குடங்களெல்லாம் தொடர்ந்துபொங்கிமேலூறவே

பொட்டல்புதூர்மேலத்தம் கொத்துவாப்பள்ளிவடக்கு
தெருவில்குடங்கள்நிற்கவே சந்தோஷமாக
ஜனங்கள் வேடிக்கை பார்க்கவே
சரஞ்சரமாகவே விருசுகளிலங்க சங்கீதமேளங்கள்
எங்குமுழங்க சலசலாவென்றுஉதிர்ந்திடும்
நக்ஷத்திரவாணம் காணக்கண் ஆயிரம்வேணும்.

தங்கச்சந்தனக்குடம். சம்பிரமமதாகவே
சமர்த்தாய்வரும்நேர்த்தியே முகையதீனாண்டவர்கள்
வாசல்வந்து இறங்கும்கீர்த்தியே
கங்கைக்கரைதனில் தங்கும்நல்லரண்மின் எங்கும்
புகழ்படைத்த இனும்தார் எஜமானென்றும் தருகா
முன்வாசமாம்
முகையதீன் ஆண்டவர்கள் ஏழைகள்மீதில்நேசமாம்.

எட்டையாபுரம் தெம்மாங்கு மெட்டு.

நிறைபுரைகொடியழகும் நிகரில்லா பள்ளியழகும்
கடையழகைப் பாராய் கண்மணியே நேராய்
கொடியுயரம்பாராய் கொத்துவாப்பள்ளிநேராய்

மண்டபத்தின்மீதிருந்து மாடப்புராகுயில்கள்கூவும்
மாமயில்கள்வாசம் அங்குமகமதியர்நேசம்
மண்டலங்களெங்கும் முகையதீனாண்டவர்புகழ்ஓங்கும்

எந்தயிடம்பார்த்தாலும் ஏகமாய்ஜனங்கள்வந்து
கந்தரிகளாக்கும் அவர்கவலைகளை நீக்கும்
முந்திப்பிள்ளையாசை முகையதீனாண்டவர்கள்தீர்க்கும்

காணிக்கையென்றவர்கள் கைநிறைநதபவுண்வாரி
மாணிக்கமும்வெள்ளி மனம்மகிழ்ந்து அள்ளி
பாதமதில்வைத்து பணிந்துநிற்கும் பள்ளி

சந்தனக்குடங்கள்வரும் சங்கீதங்களென்னபாரும்
இங்கிதமாயாருமுகையதீனாண்டவர்பாதம்தேரும்
சங்கடங்கள்தீர்க்கும் சர்வலோகத்திலெல்லோர்க்கும்

யானைமேல்கொடிகள்வைத்து அன்பர்களுமாவுத்தர்கள்
கொடிகளைவைத்தாங்கும் கோடானகோடிபேர்கள்
பத்தாம்இரவு கொடிகள் பக்கத்தில்வெஞ்சாமறைகள்

சேந்தாழம்பூ என்ற மெட்டு.

பொட்டல்புதூர் நகரையாளும் பூமனே நபிபேரனே
அட்டதிசைபுகழும் ஆண்டவரே யென்னையாளும்
அரும்பெருளும்நீர் தரும்புவிமீதில் துரைமுகையதீன்
ஆண்டவர்கிருபை பொ.

எந்நாளுமுன் ஆளாகவே பொன்னடிதொழுதோதினேன்
மன்னவர்மறையோர்தொழும் மாமணிமுகைதீனே [ன்
மலர்பதந்தரும் - இரக்கமாய்காரும் - கடைக்கண்ணால்
பாரும் - கலிகளைத்தீரும். பொ.

உன்னையன்றிவேறேதுணை உலகிலொருவரில்லையே
அன்னையும்பிதாவும்நீரே அருள்தரும் நபிபேரரே
ஆதியேபரஞ்- சோதியேஉம்மை- ஓதியேபணிந்தேன்
கெதியே. பொ.

சித்திரக்கட்டிலில்லுரி என்றமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

முறையதீனாண்டவலியே முத்திதந் தாளும்
மெய்ஞானும் குதுபே. மு

அனுபல்லவி.

முன்னம்சென்னைதன்னிருந்து பின்னல்பொட்டல்
தனிலமர்ந்து முற்றுமும்மை நம்பினேனே சிற்றறிவு
பற்றினேனே. மு

சரணம்.

என்னுளுமுமதுபாதம் தஞ்சமென்று சிந்தியபக்தர்கள்
பழஞ்சாம்பராணிகொண்டு—எஙகள் வறுமையகற்றும்

சீமானென்று — எப்பொழுதும் தருகாமுன்னல் தொழுதுண்டு — ஏழைகள்பிணிகளைத்தீரும் — முகத்தைக் கண்பாரும் — பாவமணுகாமல்காரும் பக்தருக்கென்னேரமும். மு

கலவிக்குச்சரிஜோடி என்றமெட்டு.

பொட்டல்புதூர்நகர்நிதியே எங்கள்புகழ்முகைதீனெலியே
நல்லபோற்றினேன் உம்மை காத்திடும் யென்னை
ஆத்திரமாகப் பாத்தியாசெய்வோம். பொ

லாயில்லஹாவென்றுஉம்மை நாஙகள்தொழுகுவோமென்று
நல்ல நலம்மிகும்பதி தினமுமேதுதி
நன்பர்க்குக்கெதி இன்பம் இத்தி. லா

கந்தரிஎன்னகொண்டாட்டம் அஙகுகாதலாய்வந்தவர்கூட்டம்
நல்ல கமகமவென சமரசமென்ன
அமைதிருவென்ன ஆச்சரியமென்ன. கந்தரி

முத்தமிழ்சிவனுபாண்டியன்பதம் பக்தியாய்தொழுகுவோமே
நல்ல சித்தமகிழ்ந்து நித்தம்புகழ்ந்து
உத்தமர் என்று ஓதிடுவோம்என்றும். முத்

முற்றிற்று.

ஷண்முகவிலாசம் பிரஸ், தெற்குரதவீதி, அம்பாசமுத்திரம்.

அச்சுவேலை அறிவிப்பு.

எமது அச்சாபீஸில் நூதன கலர் மை, கிலிட் மை, பிரஸ்காப்பி மைகளுடனும், 'இங்கிலீஷிலும் தமிழிலும்' கடித தலைப்புகள், முகூர்த்த பத்திரிகைகள், ரசீதுகள், நூல்பாரங்கள், புக்குகள் இன்னும் பலமாதிரிகளிலும் சுத்தமாகவும் குறித்தகாலத்திலும் அச்சடித்துக் கொடுக்கப்படும். தங்களுக்கு அச்சடிக்கவேண்டிய சகல வேலைகளையும் அடியிற்கண்ட எமது ஆபீசுக்கு ஆர்டர் கொடுக்கவும்.

ஷண்முக விலாசம் பிரஸ்,

தெற்கு ரதவீதி,

அம்பாசமுத்திரம்.